


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 164 | 4 Pages | 12.1.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825


மலர்: 03 | இதழ்: 164 | 4 பக்கங்கள் | 12.1.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி யிடத்தாற் செயின்**

**விளக்கம்: (செய்யும் வழிவகைகமைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால், அஞ்சாமை அல்லாமல் வேறு துணை வேண்டியதில்லை.**

## ஈரானில் அரசுக்கு எதிராக போராட்டம்: பெரும் சேதம்.. பாதுகாப்புப் படையினர் 30 பேர் பலி



இஸ்பகான் [ஈரான்], ஜன.12

ஈரான் நாட்டில் உச்சபட்ச தலைவராக அயோதுல்லா அலி காமேனி இருந்து வருகிறார். அந்நாட்டில் அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28ந்தேதி தொடங்கியது. அதிகரித்து வரும் பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை ஆகியவற்றால் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால், அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்து உள்ளது.

மாகாணங்கள், நகரங்கள் என பல்வேறு பகுதிகளிலும் மக்கள் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 2 வாரங்களாக நடந்து வரும் இந்த ஆர்ப்பாட்டம் இன்றும் நீடிக்கிறது. அவர்களை ஒடுக்கவும், ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கும் முயற்சியாகவும் பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் போராட்டம் தீவிரமடைந்து உள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவை முடக்கி வைக்கப்பட்டு உள்ளது. இதனால், ஈரானில் நடப்பது என்ன என்பது பற்றி வெளியுலகிற்கு சரிவர தெரியாத வகையில் செய்திகளும் முடங்கி உள்ளன. இதனால், தங்களுடைய நண்பர்கள், உறவினர்களுடன் மக்கள் தொடர்பு கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. எனினும், ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் நூற்றுக்கணக்கானோர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இஸ்பஹான் மாகாணத்தில் வெளிநாடுகளின் ஆதரவுடன் நடந்ததாக கூறப்படும் கலவரத்தின்போது 30 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்ததை அந்த மாகாணத்தின் கவர்னர் அலி அஹ்மதி உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் இந்த விவகாரம் குறித்துப் பேசிய அஹ்மதி, கொல்லப்பட்ட பாதுகாப்புப் படையினருக்கான இறுதிச் சடங்குகள் நாளை நடைபெறும் என்று கூறினார். இந்த வன்முறையின் போது இரண்டு மாதக் குழந்தை உட்பட பொதுமக்கள் பலரும் உயிரிழந்ததாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே இந்தக் கலவரங்களால் இஸ்பஹானில் உள்ள 10 மசூதிகள் தீவைத்துக்கொளுத்தப்பட்டதால், பெரும் சேதம் ஏற்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளது. மேலும் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடவுளின் எதிரி... 2,600 பேருக்கு மரண தண்டனையா? ஈரானில் பதற்றம்

தெஹ்ரான், ஜன.12

ஈரான் நாட்டில் அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28ந்தேதி தொடங்கியது. அதிகரித்து வரும் பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 2 வாரங்களாக நடந்து வரும் போராட்டம் இன்றும் தீவிரமடைந்து உள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்புபடையினரை அரசு இறக்கிவிட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வன்முறையை பரவாமல் தடுக்கும் நோக்கில் என கூறி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. இதனால், ஈரானில் நடக்கும் விசயங்கள் வெளியுலகிற்கு சரிவர தெரியாத வகையில் நிலைமை உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

எனினும், ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 116 பேர் பலியாகி இருக்ககூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது.

இந்த சூழலில், ஈரானின் அட்டார்னி ஜெனரல் முகமது மோவாஹிதி ஆசாத் அரசு தொலைக்காட்சியில் வெளியிட்டு உள்ள அறிக்கையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள், கலகக்காரர்களுக்கு உதவுபவர்கள் அல்லது வன்முறையில் பொருட்களை சூறையாடுபவர்கள் மற்றும் பாதுகாப்பின்மையை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான, விரைவான, சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அந்த குற்றவாளிகள் அனைவருக்கும் ஒரேவித தண்டனைதான் கிடைக்கும். அவர்களுக்கு எந்தவித கருணையும் காட்ட கூடாது என வழக்கறிஞர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளார்.

ஈரானுக்கு எதிராக, அந்நிய நாட்டின் ஆதிக்கம் செலுத்த கூடிய, பாதுகாப்பற்ற சூழலை உருவாக்ககூடிய, நாட்டுக்கு எதிராக செயல்படுபவர்களை கண்டறிந்து, தாமதமின்றி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள் என்றும் வழக்கறிஞர்களுக்கு கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு எதிராக செயல்படுவோர், பொது சொத்துக்களை சேதப்படுத்துபவர்கள், சூறையாடுபவர்கள், ஈரான் தண்டனை சட்டத்தின் கீழ் கடவுளுக்கு எதிராக போர் செய்பவர்களாக ஆகிறீர்கள். ஈரானில் இதுபோன்ற கொடுங்குற்றங்களுக்கு மரண தண்டனை உள்பட தீவிர தண்டனைகள் விதிக்கப்படும் என எச்சரித்து உள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 2,600 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் கடவுளின் எதிரிகளாக கருதப்படுவார்கள். அந்த அடிப்படையில் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் என ஆசாத் கூறி வருகிறார்.

இஸ்லாமிய நாடான ஈரானின் சட்டப்படி இந்த குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்படும். அதனால், ஈரானில் அரசுக்கு எதிரான தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட 2,600 பேரின் நிலை என்ன? என தெரியாமல் பதற்றம் காணப்படுகிறது.

# 1.86 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை விநியோகம்: அமைச்சர் பெரியகருப்பன் தகவல்

சென்னை, ஜன.12

அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு இன்று வரை 24,924 ரேஷன் கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.5,587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000 வழங்கப்படும்" எனவும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 8ந்தேதி சென்னை, பட்ரோடு ரேஷன் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். மேலும், துணை முதல்அமைச்சர் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS ரேஷன் கடையிலும், அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய ரேஷன் கடைப் பணியாளர்களால் வழங்கப் பட்டது.

இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய ரேஷன் கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல் மற்றும் தொய்வில்லாமலும், விரைவாக குறைந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாததை, கூட்டுறவு வங்கி திறம்பட செய்து சாதித்துள்ளது.

11.1.2026 இன்று வரை 24,924 ரேஷன் கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ. 5587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தொப்பம்பட்டியில் திராவிட பொங்கல் விழா – கோலப்போட்டி கோலாகலம்

தாராபுரம்:

திருப்பூர் திமுக கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய திமுகவின் சார்பில், தொப்பம்பட்டி ஊராட்சியில் உள்ள சினிய கவுண்டன்பாளையம் , கிராமத்தில் நடைபெற்றதிராவிடபொங்கல்விழாவையொட்டி பெண்களுக்கான கோலப்போட்டி நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சி திமுக ஒன்றிய செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் தலைமை ஏற்று தொடங்கி வைத்தார். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்.

போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் திறமைக்கேற்ப சுமார் 10, லட்சம் மதிப்புள்ள நினைவுப் பரிசுகளை ஒன்றிய செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார் அவரது கரங்களால் வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர் இ.புவனேஸ்வரி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ச.சிலம்பரசன், சினிய கவுண்டன்பாளையம் கிளை திமுக செயலாளர் சிவக்குமார், ஊராட்சி ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் கலைச்செல்வி நட்ராஜ், உப்பாறு பாசன வாய்க்கால் தலைவர் கதிரேஸ், மோகன் ராஜ், விசுவநாதன், ஊராட்சி முன்னாள் துணை தலைவர் பழனிச்சாமி, பெரியசாமி, ஒன்றிய அயலக அணி அமைப்பாளர் கண்ணன், ஒன்றிய மகளிரணி துணை அமைப்பாளர் கௌரி, அம்மாசை, கதிரேசன், சுப்பிரமணி, கந்தசாமி, சண்முக வடிவேல் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சமத்துவ பொங்கல் சமூக ஒற்றுமையின் அடையாளம் – பொது மக்களிடம் எஸ்.வி.செந்தில்குமார் பேச்சு:

நிகழ்ச்சியில் ஒன்றிய திமுக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் பேசுகையில், “திராவிட முன்னேற்ற கழகம் எப்போதும் பொங்கல் திருநாளை அனைவரும் சமமாக, வேறுபாடின்றி கொண்டாடும் சமத்துவ விழாவாக கொண்டாடி வருகிறது.

சமத்துவ பொங்கல் என்பது ஒரு அரசியல் நிகழ்வு அல்ல. அது சமூக ஒற்றுமையையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்தும் மக்கள் விழா. அனைத்து சாதி, மதம், மொழி வேறுபாடுகளை தாண்டி, ஒரே மேடையில் மக்கள் ஒன்றிணைந்து பொங்கலை கொண்டாட வேண்டும் என்பதே திமுகவின் நோக்கம். தாராபுரத்தில் ஒன்றிய பகுதிகளில் உள்ள ஊராட்சிகள் முழுவதும் சமத்துவ பொங்கல் விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் சமூக நல்லிணக்கம் வலுப்பெற்று வருகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, விவசாயிகள், உழைப்பாளிகள், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பொங்கல் பரிசுத் தொகை, விவசாயிகளுக்கான ஆதரவு திட்டங்கள், சமூக நீதியை மையமாகக் கொண்ட அரசியல் ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டாகும்.

இளைஞர்கள் விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஒழுக்கமும் உடல் ஆரோக்கியமும் மேம்படும். அதற்காகவே கபடி, கோலப்போட்டி போன்ற பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்து வருகிறோம்” என்றார்.

மேலும் தளவாய்பட்டிணத்தில் மாபெரும் கபடி போட்டி – இளைஞர்கள் உற்சாக பங்கேற்பு.

இதனைத் தொடர்ந்து, திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில், தளவாய்பட்டிணம் ஊராட்சி இரண்டு நாட்கள் நடைபெற்று முடிந்த கபடி போட்டியில்

தாராபுரம் ஒன்றிய திமுக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் தலைமையில் கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ரொக்க பணம் நினைவு கோப்பை கேடயம் சான்றிதழ் போன்றவற்றை வெற்றி வீரர்களுக்கு திமுக ஒன்றிய செயலாளர் எஸ் வி செந்தில் குமார் தனது திருகரங்களால் வழங்கினார்.

போட்டியில் தளவாய்பட்டிணம் ஊராட்சி பொறுப்பாளர் பி.கணேஷ் குமார், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ச.சிலம்பரசன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மணிவாசகம், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்தி, தளவாய்பட்டிணம் திமுக கிளை நிர்வாகிகள் சங்கிலிதுரை, முகமது இஷாக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு போட்டிகளை ஆர்வமுடன் கண்டு ரசித்தனர்.

## கூடலூரில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் – விற்பனையாளர் கைது

தேனி மாவட்டம் கூடலூரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த நபரை போலீசார் கைது செய்தனர் . அவரிடமிருந்து ரூ.40,000 மதிப்புள்ள, சுமார் 60கிலோ எடையுள்ள புகையிலைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கூடலூர் வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் கோதண்டராமன் தலைமையிலான போலீசார், கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கள்ளர் கிழக்கு புதுத்தெருவில் இடிந்து கிடந்த நிலையில் இருந்த ஒரு வீட்டில் திடீர் சோதனை மேற்கொண்டனர் . அப்போது அங்கு 3 சாக்கு மூட்டைகளில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



விசாரணையில், அந்த புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்திருந்தவர் கூடலூர் உசேன் ராவுத்தர் தெருவைச் சேர்ந்த அஜ்மல்கான் மகன் தாரிக் உசேன் (29) என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் புகையிலைப் பொருட்களை கைப்பற்றி, வழக்குப் பதிவு செய்து தாரிக் உசேனை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உடுமலை அருகே

# பழனி பாதயாத்திரை பக்தர் சரக்கு வேன் மோதி சாவு!

உடுமலை, ஜன.12–
கேரளாவை சேர்ந்த பக்தர்கள் பழனி பாதயாத்திரை சென்று கொண்டிருந்த போது உடுமலை அருகே சரக்கு வேன் மோதியதில் ஒருவர் பலியானார்.

கேரளமாநிலம் பாலக்காடு மாவட்டம் தெற்கு முறியைச் சேர்ந்த 140 பக்தர்கள் பழனி கோவிலுக்கு கடந்த 8ம் தேதி பாத யாத்திரை தொடங்கினர்.

நேற்று அதிகாலை 2 40 மணிக்கு திருப்பூர் மாவட்டம் உடுமலை பெரிய கோட்டை பிரிவு அருகே நடந்து சென்ற போது பின்னால் வந்த சரக்குவேன் முத்துப்பாண்டியன் (25) லோகநாதன் ( 24 ) ஆகிய இருவர்மீது மோதியது. இதில் படுகாயம் அடைந்த அவர்களை ஆம்புலன்ஸில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் முத்துப்பாண்டியன் இறந்தார் .லோகநாதன் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

சரக்கு வேன் டிரைவர் மதுரை சேர்ந்த மணிகண்டனை உடுமலை போலீசார் கைது செய்தனர்.

ஆனைமலை பகுதியில்

# பொங்கல் பரிசு தொகுப்பில் வேட்டி, சேலை வழங்காததால் பொதுமக்கள் அதிருப்தி!

ஆனைமலை, ஜன.12–
பொங்கல்திருவிழாவை முன்னிட்டு தமிழக அரசு அறிவித்த 3,000 ரூபாய் ரொக்கம்,ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழு கரும்பு,வேட்டி மற்றும் சேலை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புதமிழகமெங்கும் நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக , கோவை மாவட்டம் ஆனைமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில்கடந்த இரண்டு நாட்களாக பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வந்தது. இதன் தொடர்ச்சியாக ஆனைமலையில் உள்ள 004 என்ற எண்ணுடைய நியாய விலை கடையில்பொங்கல் பரிசு பெற வந்த ரேஷன் அட்டைதாரர்களுக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு, ரூபாய் 3000 மட்டும் வழங்கி, இலவச வேட்டி மற்றும் சேலை வழங்கப்படாது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் பரிசுத் தொகுப்பு வாங்க வந்த பொதுமக்கள்மிகுந்த மன வருத்தம் மற்றும் அதிருப்தி அடைந்தனர்.இது போன்ற நிலை கடந்த வருடமும் ஏற்பட்டதாகவும்,அப்போதும் சரியான முறையில் இலவச வேட்டி–சேலை வழங்கப்படவில்லை என்றும்பொது மக்கள் கடுமையான குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர். பொங்கல் நாளில் முழு பரிசு கிடைக்காததால் பொது மக்களிடையே கடும் அதிருப்தி நிலவி வருகிறது.அரசின் அறிவிப்புகள் முழுமையாக நடைமுறைக்கு வருமா?பொங்கல் பரிசில் குழப்பம் தீருமா?என்பது குறித்து மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.



மொடக்குறிச்சி அடுத்த நஞ்சை ஊத்துக்குளியில் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

# பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி!

மொடக்குறிச்சி, ஜன.12
மொடக்குறிச்சி அடுத்த நஞ்சை ஊத்துக்குளியில் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் சார்பில் பொதுமக்கள் இடையே பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தனியார் பள்ளிகள் மற்றும் கருந்தேவன் பாளையம் நடுநிலைப் பள்ளி மாணவ மாணவியர் பங்கேற்ற பிளாஸ்டிக் ஒழிப்பு

குறித்த விழிப்பு ணர்வு பேரணி மீண்டும் மஞ்சப்பை என்று கோஷத்துடன் நடைபெற்றது.

மொடக்குறிச்சி அடுத்த நஞ்சை ஊத்துக்குளி கருந்தேவன்பாளையம் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் மீண்டும் மஞ்சப்பை என்ற கோஷத்துடன் துவங்கிய விழிப்புணர்வு பேரணியை ஈரோடு ஊராட்சிகள் துறை திட்ட இயக்குனர்பிரியாகலந்துகொண்டு துவக்கி வைத்;தார். மொடக்குறிச்சிவட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருநாவுக்கரசு, சுமித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழி ப்புணர்வு பேரணியானது, கருந்தேவன் பாளையம் அரசு நடுநிலைப்பள்ளியில் துவக்கி வைக்கப்பட்டு, ஊரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து மாரியம்மன் கோவில் வளாகத்தில் முடிவ டைந்தது.

இதில் தனியார் பள்ளி மாணவமாணவியர், பொதுமக்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டுவாரிய உதவி பொறியாளர் சந்திர சேகர் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மகேஸ்வரி, ஊராட்சி செயலாளர்கள் சரவணன், பூபதி, சந்தோஷ், தியானேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரக்கம்பாக்கம் ஊராட்சியில் பொங்கல் பரிசு மற்றும் பொங்கல் தொகுப்பு வழங்கல்



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில்

அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சரிசி, சர்க்கரை, முழு செங்கரும்பு, ஆகியவற்றுடன்ரூ.3000 மும் பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம்சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் உத்தரவின்படி மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் அரக்கம்பாக்கம் ஊராட்சி நியாயவிலை கடையில் அரக்கம்பாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும் அயலக அணி மாவட்ட அமைப்பாளருமான கோவிந்தராஜ் தலைமை தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் மோரைகோ.தயாளன்கலந்துகொண்டு தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இதில் மோரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மோரை ஆர்.திவாகரன், ஒன்றிய இளைஞர்துணைஅமைப்பாளர் ஸ்டீபன் (எ) வெ. ஹரிகிருஷ்ணன், வே.கார்த்திக் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கோவை பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்யாலயா பாலிடெக்னிக் கல்லூரியில் தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் டாக்டர் சந்திரசேகரன், தாளாளர் தத் பாஸானந்தா மகராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில்

# 198 மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள்!

பெ.நா.பாளையம், ஜன.12–
கோவை பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீராமகிருஷ்ணாவித்யாலயாபாலிடெக்னிக் கல்லூரியில் தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் டாக்டர் சந்திரசேகரன் வரவேற்று பேசினார். தாளாளர் தத் பாஸானந்தா மகராஜ் ஆசியுரை வழங்கினார்.

கூடலூர் நகர்மன்ற தலைவர் அ.அறிவரசு சிறப்புரை ஆற்றினார்.தொடர்ந்து

பட்டய படிப்பு இறுதி ஆண்டு பயிலும் 198 மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கினர். இதில்

மன்ற உறுப்பினர்கள் ஜனார்த்தனன்,பாலசுப்பிரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.முடிவில் செந்தில்குமார் நன்றி கூறினார்.

கோவை மாநகராட்சி பகுதியில்

# ரூ.106 கோடியில் 1,847 சாலைகள் சீரமைக்கும் பணி!

## ஆணையாளர் சிவகுருபிரபாகரன் தகவல்!!

கோவை,ஜன.12
முதல்அமைச்சர் மு..க ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி கோவை மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு ,மேற்கு,வடக்கு,தெற்கு மற்றும்மத்தியம் ஆகிய மண்டலங்களில் வார்டு பகுதிகளில்பொது மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சிதிட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவைமாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3,456 சாலைகள் 503.67 கி மீட்டர் நீளத்திற்கு மண் சாலைகள் மற்றும் பழுதடைந்த சாலைகளை புதுப்பிக்கும் வகையில் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டது.தொடர்ந்துசுமார்3ஐ229 சாலைபணிகள்467.72 கி மீ நீளத்திற்குமுடிக்கப்பட்டது. மீதமுள்ள 227 சாலைகள்37.03 கி மீ நீளாத்திற்கு நடைபெற்று வருகிறது,மேலும்இந்த பணிகள் வரும் 31 ந் தேதிக்குள் முடிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர மாநகராட்சிக்கு கூடுதலாக ரூ. 106.14கோடியில்1,847 சாலைகள் 254,54கிமீநீளத்திற்குதார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை புது ப்பிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,அதில்1,379தார்சாலைகள் 204.94 கி மீ நீளத்திற்கும் புதுப்பிக்க நிர்வாகம்அனுமதி பெறப்பட்டு உள்ளது. இதற்கான பணிகள்விரைவில்தொடங்கப்பட்டுஅனைத்து சாலைகளும் சீரமைக்கும் பணிகளும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் விரைவாக முடிக்கப்படும் இவ்வாறு மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன்கூறினார்.

# சூதாடிய 4 பேர் கைது!

புளியம்பட்டி, ஜன.12
சத்தியமங்கலம் சாலை உள்ள புதுரோடு டாஸ்மார்க் கடை அருகில் நாணயத்தை சுண்டி தலையா–பூவா என பணம் கட்டி பந்தய சூதாட்டம் விளையாடிக் கொண்டிருந்த 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

தனி பிரிவு தகவலின் பேரில், நேற்று மாலை புளியம்பட்டிகாவல்நிலையபோலீசார்அப்பகுதியில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.அப்போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக புங்கம்பள்ளி, கூடகரை, நம்பியூர், போன்ற பகுதிகளைச் சேர்ந்த ரகு (50), சுரேஷ்பாபு (55), விஜயகுமார் (30), ராமலிங்கம் (46) ஆகிய நால்வரும் பிடிபட்டனர்.

அவர்களிடமிருந்து ரூ.2,470 ரொக்கம் மற்றும் 3 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பிடிபட்ட நபர்கள் காவல் நிலையம் அழைத்து வரப்பட்டு, உதவி ஆய்வாளர் அப்பாதுரை வழக்குப்பதிவு செய்து பிணையில் விடுவித்தார் .

தொடர்ந்து நடைபெறும் சூதாட்ட சம்பவம் புளியம்பட்டி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மாவட்ட அளவிலான கோ கோ போட்டி!

மொடக்குறிச்சி, ஜன.12
மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் தைப்பொங்கலை சிறப்பிக்கும் வண்ணம் மாவட்ட அளவிலான பள்ளி மாணவிகள் பங்கேற்கும்கோகோபோட்டி நடைபெற்று வருகிறது.

மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் கோ கோ போட்டி துவக்க விழாவில் மொடக்குறிச்சி திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் வா. கதிர்வேல் தலைமை தாங்கினார்.

மொடக்குறிச்சி பேரூர் கழக திமுக செயலாளர் பி.வி. சரவணன் வரவேற்றார்.

இதில் மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர்விஜயகுமார் (தெற்கு), குணசேகரன்(மேற்கு),கொடுமுடி வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு போட்டிகளை துவக்கி வைத்து மாணவிகளை வாழ்த்தி பேசினர்.

ஈரோடு மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளி மாணவிகளுக்கு இடையே ஆன இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக ரூபாய் பத்தாயிரம் மற்றும் கோப்பை இரண்டாம் பரிசாக 7500 மற்றும் கோப்பை மூன்றாம் பரிசாக 5000 மற்றும் சுழற் கோப்பை நான்காவது பரிசாக 2500 மற்றும் கோப்பைகள் வழங்கப்படுகின்றன மற்றும் சிறப்பாக விளையாடும் மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்படுகிறது.

இதில் மொடக்குறிச்சி திமுக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தனசேகர், மொடக்குறிச்சி பேரூர் திமுக துணைச் செயலாளர் தனவெங்கடேஷ்,நிர்வாகிகள் ஆனந்த், வேலு, மௌனிஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் கோ கோ போட்டி துவக்க விழாவுக்கு மொடக்குறிச்சி திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் வா. கதிர்வேல் தலைமை தாங்கினார்.

# ரயில்வே ஊழியரின் வீட்டில் 7 பவுன் திருட்டு!

ஈரோடு,ஜன.12
ஈரோட்டில் ரயில்வே ஊழியரின் வீட்டின் பூட்டை உடைத்து 7 பவுன் நகையை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் நவநீத் (36). இவர் ஈரோடு ரயில் நிலையத்தில் கூட்ஸ் ரயில் ஓட்டுநராகப் பணியாற்றி வருகிறார்.

இவர் கடந்த 4 ஆண்டுகளாக ஈரோடு ரங்கம்பாளையம் அருகே லட்சுமி கார்டன் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். கடந்த ஓராண்டாக நவநீத் மட்டும் தனியாக வசித்து வந்துள்ளார்.

நவநீத் கடந்த கடந்த 5 ஆம் தேதி மனைவி மற்றும் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக கேரளம் சென்றார். இந்நிலையில் நவநீத் வெள்ளிக்கிழமை நள்ளிரவு வீட்டுக்கு வந்த போது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது.

வீட்டினுள்இருந்தபீரோ திறக்கப்பட்டு, உள்ளே இருந்த 7 பவுன் நகையை மர்ம நபர்கள்திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து ஈரோடு தாலுகா போலீஸில் நவநீத் அளித்த புகாரின்பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, திருட்டில் ஈடுபட்ட நபர்களைத் தேடி வருகின்றனர்.

சித்தோடு, ஆலாம்பாளையத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்!

ஈரோடு,ஜன.12
சித்தோடு மற்றும் ஆலாம்பாளையத்தில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

சித்தோட்டில் நடைபெற்ற முகாமை, தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தொடங்கிவைத்து கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டை என 18 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில், 34 சிறப்பு மருத்துவர்கள், 20 மருத்துவர்கள் கலந்து கொண்டு நோயாளிகளுக்கு பரிசோதனை மற்றும் சிகிச்சை அளித்தனர். மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டப் பேரவை உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் அருணா, சித்தோடு பேரூராட்சித் தலைவர் கண்ணகி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அம்மாபேட்டையை அடுத்த ஆலாம் பாளையத்தில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட மருத்துவ முகாமுக்கு குருவரெட்டியூர் வட்டார அரசு சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மாதேஷ் குமார் தலைமை வகித்தார்.

அந்தியூர் சட்டப் பேரவை உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம் முகாமைத் தொடங்கிவைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில், 25க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்கள் பங்கேற்று சிகிச்சை அளித்தனர்.

அந்தியூர் அருகே

# ஆட்டைக் கடித்துக் கொன்ற சிறுத்தை!

ஈரோடு,ஜன.12
அந்தியூர் அருகே கொட்டகைக்குள் புகுந்த சிறுத்தை, ஆட்டைக் கடித்துக் கொன்றதால் விவசாயிகள், பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அந்தியூர், கோவிலூர், கன்னியாமடுவு தோட்டத்தைச் சேர்ந்தவர் பெரியசாமி (52), விவசாயி. வனப் பகுதிக்கு அருகாமையில் உள்ள தோட்டத்தில் வசிக்கும் இவர், கொட்டகை அமைத்து 5 செம்மறி ஆடுகளை வளர்த்து வருகிறார்.

இந்நிலையில், இரவு ஆடுகள் கத்துவதைக் கேட்ட பெரியசாமி சென்று பார்த்தபோது, சிறுத்தையின் உருவ அமைப்புடன் ஒரு விலங்கு, ஆட்டைக் கவ்விக் கொண்டிருந்தது.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பெரியசாமி, கூக்குரல் எழுப்பியதால் ஆட்டை விட்டுவிட்டு அங்கிருந்து சிறுத்தை தப்பியோடியது.

ஆடு உயிரிழந்த நிலையில், சிறுத்தையின் காலடித் தடங்கள் அப்பகுதியில் பதிவாகி உள்ளதைக் கண்ட விவசாயிகள் அந்தியூர்வனத்துறைக்குதகவல் தெரிவித்தனர். இதுகுறித்து, விசாரணை நடைபெற்று வருகிறது.

குமாரபாளையத்தில்

# தெரு நாய்கள் கடித்து 6 ஆடுகள், 8 கோழிகள் பலி!

## 30 ஆடுகள் படுகாயம்!!

குமாரபாளையம், ஜன,12
குமாரபாளையம் அருகே தெரு நாய்கள் கடித்து 6 ஆடுகள், 8 கோழிகள் பலியாகின. 30 ஆடுகள் படுகாயமடைந்தன.

குமாரபாளையம் அருகே சாணார்பாளையத்தில் வசிப்பவர் செல்வ



ராஜ்(40),இவர் ஆடு வளர்க்கும் தொழில் செய்து வருகிறார். இவர் ஆடுகளை பட்டியில் அடைத்து வைப்பது வழக்கம். நேற்றுமுன்தினம் இரவு பட்டியில் அடைத்து வைத்தார். நள்ளிரவில் அப்பகுதியில் உள்ள தெரு நாய்கயள் பட்டியில் புகுந்து, ஆடுகளை கடித்து குதறியுள்ளன. இதில் வி.ஏ.ஓ. செந்தில்குமார் கொடுத்த தகவல்படி, ஆடுகள் இறப்பு, 6, கோழிகள் இறப்பு 8, படுகாயமடைந்த ஆடுகள் 30.

இதன் மதிப்பு 50 ஆயிரத்துக்கு மேல் இருக்கும் என கூறப்படுகிறது. காயமடைந்த ஆடுகளுக்கு கால்நடை மருத்துவர்கள் சிகிச்சையளித்தனர். இதற்கு காரணம் அப்பகுதியில் உள்ள தெரு நாய்கள் தான் என தெரிகிறது. இதற்கு குப்பாண்டபாளையம் ஊராட்சி நடவடிக்கை எடுத்து, இப்பகுதியில் சுற்றி வரும் தெரு நாய்களை காப்பகம் ஏற்படுத்தி அதில் விட வேண்டும் மேலும் வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு ஊராட்சியில் பாஸ் பெற்று இரவில் வெளியே விடாமல் பாதுகாப்பு செய்ய வேண்டும் என இப்பகுதி மக்கள் கூறினார்கள்.

தர்மபுரி மாவட்டம் இண்டூர் அருகே பயங்கரம்:

# கள்ளக்காதல் விவகாரத்தில் உயிருடன் சமாதியான கொழுந்தியாள்!

## மண்ணை கொட்டிக் கொன்ற காண்டிராக்டர் கைது!!

நல்லம்பள்ளி;ஜன 12

தர்மபுரி மாவட்டம், இண்டூர் அருகே, தளவாய் ஹள்ளி பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஒசஹள்ளிபுதுார் கிராமத்தை சேர்ந்த பிரபு(35) ஆகும்.இவர் பெங்களூருவில் கட்டட மேஸ்திரி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த, 12வருடத்திற்கு முன், ராஜேஸ்வரி(30) என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு, 10 வயதில் ஒரு ஆண், 7வயதில்ஒருபெண் குழந்தை உள்ளது. இந்த நிலையில், ஒசஹள்ளிபுதுார்கல்லகொல்லைமேடு பகுதியில் உள்ள தனியார் லே அவுட் பகுதியில் ராஜேஸ்வரி அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில், மண் கொட்டி மூடப்பட்டிருப்பதாக போலீசுக்குதகவல்கிடைத்தது. இதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற இண்டூர் இன்ஸ்பெக்டர் தமிழரசி தலைமையிலான போலீசார் பொக்லைன் மூலம், மண் கொட்டி மூடப்பட்டிருந்த ராஜேஸ்வரி சடலத்தை தோண்டி எடுத்தனர்.பின்னர் ஒசஹள்ளி புதுார் கிராமத்தை சேர்ந்த பில்டிங் கான்டிராக்டர் அனுமந்தன் (40) என்பவரை பிடித்து விசாரணை செய்தனர்.அதையடுத்துபோலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:





அனுமந்தன் மனைவி முனியம்மாள்(35)இந்த தம்பதிக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். முனியம்மாளின் தங்கையான ராஜேஸ்வரி, அனுமந்தனின் தம்பி உறவு முறையான பிரபுவை திருமணம் செய்திருந்த நிலையில், இரு குடும்பத்தினரின் வீடுகள் அருகருகே உள்ளது. இதில்,பிரபு பெங்களூருவுக்கு வேலைக்கு சென்றுவிடுவதால், தனிமையில் இருந்த அவரது மனைவி ராஜேஸ்வரி மற்றும் அனுமந்தன் இருவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு, நாளைடைவில் கள்ளகாதலாக மாறியுள்ளது.

இந்த நிலையில், அனுமந்தன் நேற்று மதியம் தனியார் லே அவுட் பகுதியில் ராஜேஸ்வரியை தனியாக வரவழைத்து சந்தித்தார். அப்போது, இருவருக்கும் தகராறு ஏற்பட்டதில் ராஜேஸ்வரியின் தலை, கை, கால் பகுதிகளில் கல்லால் தாக்கியதில் அவர் மயக்கமடைந்ததும், அருகிலிருந்த பள்ளத்தில் தள்ளிவிட்டு, 7 லோடு டிராக்டர்மண்கொட்டிமூடியதை அனுமந்தன் ஒப்புகொண்டார். இதில், ஏற்கனவே, கட்டிட இடிபாடுகளுடன் கூடிய மண்ணை டிராக்டரில் தயார் நிலையில் வைத்திருந்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்து . இதையடுத்து , மனைவியின் தங்கையை கள்ளகாதல் விவகாரத்தில் கொலை செய்த அனுமந்தனை போலீசார் கைது செய்தனர். மேலும், டிராக்டருக்கு கட்டட இடிபாடுகளை ஏற்றிவிட்ட பொக்லைன் டிரைவரிடம் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர். பட்டபகலில் நடந்த கொலை சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகங்களுடன் கூடிய பேனர்கள் அடங்கிய போக்குவரத்து கழக பேருந்து சத்தியமங்கலம் பகுதி அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மோட்டார்வாகன ஆய்வாளர் எஸ்.ரவிக்குமார் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டத்தில்

# சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்காளர் உதவி மையம்!

கோவை,ஜன.12

கோவை மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் பவன்குமார் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் நடைபெற்ற சிறப்பு முகாம்கள் மூலம் பெயர் சேர்க்க, நீக்க மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள மொத்தம் 98 ஆயிரத்து19 பேர் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து வழங்கி உள்ளனர் இந்த விண்ணப்ப படிவங்கள் மீது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பரிசீலனை செய்துநடவடிக்கை வருகின்றனர்.

இந்த நிலையில் மாற்றுத்திறனாளிகள்,திருநங்கைகள்உள்படவாக்காளர்களுக்கு உதவும் வகையில்மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன் தொகுதிகளிலும் உதவி மையங்கள்அமைக்கப்பட்டு உள்ளது. கோவை தெற்கு சட்டமன்றதொகுதிக்குமாநகராட்சி மத்திய மண்டல அலுவலகம், சிங்காநல்லூர் தொகுதிக்குகோவை தெற்குதாசில்தார்அலுவலகம்,மாநகராட்சி கிழக்கு மண்டலஅலுவலகம் ஆகிய இடங்களில் உதவி மையங்கள் செயல்படும்.

கிணத்துக்கடவு தொகுதிக்கு கிணத்துக்கடவு தாசில்தார்அலுவலகம், மதுக்கரைதாசில்தார்அலுவலகம், பொள்ளாச்சி தொகுதிக்கு சப்கலெக்டர் அலுவலகம், பொள்ளாச்சி தாசில்தார் அலுவலகம் ஆகிய இடங்களிலும் ,வால்பாறைதாசில்தார் அலுவலகம், ஆனைமலைதாசில்தார்அலுவலகம் ஆகியஇடங்களில்உதவி மையங்கள் செயல்படும். இவ்வாறு கலெக்டர் பவன்குமார் தெரிவித்துள்ளார்.

# தேனி மாவட்டம் கடமலைகுண்டு பகுதியில் திமுக சார்பில் மாரத்தான் போட்டி

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி மாவட்டம் கடமலைகுண்டு பகுதியில் திமுக சார்பில் மாரத்தான் போட்டி நடைபெறுகிறது. கடமலைக்குண்டு பகுதியில் இருந்து வருசநாடு பகுதி வரை உள்ள 15 கிலோ மீட்டர் தொலைவிற்காக நடைபெற்ற இந்த போட்டிகளில் சிறுவர்கள் முதியவர்கள் என 900க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

இதில் தேவராஜ்நகர் பகுதியை சேர்ந்த நிதிஷ்குமார் என்ற ராணுவ வீரர் முதல் இடத்தை பிடித்தார்

பொங்கல் பண்டிகை மற்றும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகாவிற்குட்பட்ட கடமலைக்குண்டு பகுதியில் கடமலை மயிலை ஒன்றிய திமுக இளைஞரணி சார்பாக மாரத்தான் போட்டிகள் நடைபெற்றது. கடமலைக்குண்டு பகுதியிலிருந்து வருசநாடு பகுதி வரை 15 கிலோமீட்டர் தொலைவு தூரத்திற்காக நடைபெற்ற இந்த மாரத்தான் போட்டிகளில் சிறுவர்கள், பெரியவர்கள் என 900க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.இந்த மாரத்தான் போட்டிகளை ஆண்டிப்பட்டி தொகுதி திமுக சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் கொடியசைத்து துவங்கி வைத்த நிலையில் இந்தப் போட்டியின் முடிவில் கடமலைக்குண்டு பபகுதியிலிருந்து வருசநாடு பகுதி வரையிலான 15 கிலோமீட்டர் கொண்ட தூரத்தை முதலில் கடந்த தேவராஜ்நகரை சேர்ந்த நிதிஷ்குமார் முதல் இடத்தையும்,தூத்துக்குடியை சேர்ந்த கருத்தபாண்டி இரண்டாவது இடத்தையும்,கோயம்புத்தூரை சேர்ந்த தினகரன் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.முதல் மூன்று இடங்களை பிடித்த நபர்களுக்கு திமுக சார்பில் பரிசுகளும் ரொக்க பணமும் பரிசாக வழங்கப்பட்ட நிலையில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது.



வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், சித்தோடு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் கலெக்டர் கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் அருணா உட்பட பலர் உள்ளனர்.

# தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் முத்துசாமி வழங்கினார்!!

ஈரோடு,ஜன. 12

சித்தோடு அரசுப் பொறியியல் கல்லூரி வளாகத்தில் தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தலைமை வகித்தார். தூய்மைப் பணியாளர் நலவாரியத் தலைவர் திப்பம்பட்டி ஆறுசாமி முன்னிலை வகித்தார்.

தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர்கள் 122 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி னார். அவர் பேசுகையில், மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர் வாரியம் மூலம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், விடுதிகள், மயானம், குப்பைக் கிடங்கு ஆகிய பகுதிகளில் பணிபுரியும் 7,114 தற்காலிக தூய்மைப் பணியாளர்களை வாரியத்தில் இணைத்து அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2 பேருக்கு திருமண உதவித்தொகை ரூ.10 ஆயிரம், 7 பேருக்கு மகப்பேறுஉதவித்தொகை, 11 பேருக்கு இயற்கை மரணம் மற்றும் விபத்து மரணம் நிவாரண நிதியுதவியாக ரூ.32.75 லட்சம், 113 பேருக்கு ரூ.2.12 லட்சம் கல்வி உதவித்தொகை என ரூ.35.65 லட்சம் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். இதில் ஈரோடுபாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), மேயர் நாகரத்தினம், மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின்,மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாணவனுக்கு வெட்டு:

# தந்தை - மகன் கைது!

தம்மம்பட்டி, ஜன 12

தம்மம்பட்டி அருகே செந்தாரப்பட்டி பேரூராட்சி 6 ஆவது வார்டில் அருகருகே உள்ள வீடுகளில் வசிக்கும் இரு மாணவர்கள், தம்மம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கின்றனர். ஒரே வகுப்பில் படிக்கும் இரு மாணவர்களுக்கு, பள்ளியில் தகராறு இருந்து வந்தது. தொடர்ந்து தகராறு இருந்த நிலையில்,நேற்று முன்தினம் மாலை, செந்தாரப்பட்டியில் வீட்டில் இருந்த மாணவனை, தனது தந்தையுடன் வீடு தேடிச் சென்று அரிவாளால் மற்றொரு மாணவன் வெட்டியுள்ளார். இதில் தலையில் வெட்டுபட்டு பலத்த ரத்த காயமடைந்த மாணவனுக்கு, சேலம்அரசுமருத்துவமனையில்தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தாக்குதலுக்குள்ளான மாணவனின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் விசாரணை நடத்திய, தம்மம்பட்டி போலீசார், அரிவாளால் மாணவனை வெட்டிய 17 வயது மாணவன் மற்றும் அவரது தந்தை சுரேஷ் (47) இருவரையும், கொலை முயற்சி வழக்கில் கைது செய்தனர்.

# ஆன்லைன் வேலை ஆசை காட்டி ரூ.7.65 லட்சம் பறிப்பு!

## ஊட்டி சைபர் கிரைம் போலீசார் விசாரணை!!

ஊட்டி,ஜன. 12

ஆன்லைன் மூலம் வீட்டிலிருந்தே பணியாற்றி அதிக வருமானம் ஈட்டலாம் என்ற ஆசைவார்த்தைக்கு மயங்கிய பெண்ணிடம் ரூ.7.65 லட்சம் மோசடி செய்த சம்பவம் நீலகிரி மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக ஊட்டி சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி யைச் சேர்ந்த சுமார் 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர், வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் வேலை செய்யலாம் என சமூக வலைதளங்களில் தேடியபோது, டெலிகிராம் செயலி மூலம் மர்ம நபர்களிடமிருந்து குறுஞ்செய்தி வந்துள்ளது.

அதில், ஹோட்டல்ரேட்டிங், யூடியூப் சேனல் சப்ஸ்கிரைப் உள்ளிட்ட ஆன்லைன் பணிகளை செய்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் அறிவுறுத்தலின்படி சில பணிகளை செய்த பெண்ணுக்கு, தன்னுடைய கணக்கில் ரூ.16 ஆயிரம் இருப்பதாக குறுஞ்செய்தி வந்துள்ளது.

இதனை நம்பிய அவர், "விஐபி டாஸ்க்" என கூறி ரூ.10 ஆயிரம் செலுத்தினால் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்ற வாக்குறுதியை ஏற்று அந்த தொகையை செலுத்தியுள்ளார்.

பின்னர் ரூ.36 ஆயிரம் கிடைத்ததாக காட்டப்பட்டதால் மேலும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொட ர்ந்து, அதிக தொகை செலுத்தினால் அதிகலாபம் கிடைக்கும் என தொடர்ந்து ஆசை வார்த்தைகள் கூறிய மர்ம நபர்களின் பேச்சில் சிக்கிய அந்த பெண், பல்வேறு தவணைகளாக ஆன்லைன் பணப்பரிவர்த்தனை மூலம் ரூ.7,65,955 வரை அனுப்பியுள்ளார். ஆனால் அதன் பின்னர் எந்தப் பணமும் கிடைக்கவில்லை. மேலும், தொடர்பு கொள்ள முயன்றபோது அந்த நபர்கள் அனைவரும் தொடர்பை துண்டித்துள்ளனர்.

தான் மோசடிக்கு உள்ளானதை உணர்ந்த பெண், ஊட்டி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து, சைபர் கிரைம் ஆய்வாளர் சத்யா தலைமையிலான போலீஸார் வழக்குப் பதிவு செய்து, பணம் அனுப்பப்பட்ட வங்கி கணக்குகள் மற்றும் டெலிகிராம் தொடர்புகள் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆன்லைன் வேலை, முதலீடு, விரைவான லாபம் போன்ற ஆசை வார்த்தைகள் கூறி நடைபெறும் மோசடிகள் அதிகரித்து வருவதால், பொது மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடன்இருக்க வேண்டும் என சைபர் கிரைம் போலீஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



டெல்லி ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற 13 வது தேசிய அளவிலான விளையாட்டு போட்டியில் வென்ற தமிழக வீரர் வீராங்கனைகளுக்கு யுக்தா பாரதிய கேள் பவுண்டேஷன் தமிழ்நாடு சார்பில்பாராட்டு விழா நடத்தப்பட்ட போது எடுத்த படம். வெற்றி பெற்ற வீரர்களுடன் யுக்தா பாரதிய கேள் பவுண்டேஷன் மாநிலத் தலைவர் நைல் அ.ராஜா,பொதுச் செயலாளர் பிரகாஷ், தி.மு.க. மாவட்ட இலக்கியஅணி அமைப்பாளர் இளைய கோபால்மற்றும் பலர் உள்ளனர்.

# தாராபுரத்தில் திராவிட பொங்கல் திருவிழா கொண்டாட்டம் ஆலோசனை கூட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின்அவர்களின் ஆணை கிணங்க, திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் R.H.R. ஐஸ்வர்யம் ஹோட்டலில் (09.01.2026) அன்று மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களுடன் காணொலி காட்சியில் நடைபெற்ற திராவிட பொங்கல் திருவிழா கொண்டாட்டம் ஆலோசனை கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டார். உடன் திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளரும், திருப்பூர் மாநகராட்சி 4 ம் மண்டல தலைவருமான இல. பத்மநாபன் அவர்கள், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் திருமதி. சத்யா பழனிக்குமார் அவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், தொகுதி பார்வையாளர்கள் மற்றும் கழக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# வாணியம்பாடி அடுத்த தேவஸ்தானம் பகுதியில் கலைக்குழு சார்பில் பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழ



வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, தேவஸ்தானம் சிலம்பம் கலைக்குழு சார்பாக பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவில் வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார்BE.,MCஅவர்கள், ஆலங்காயம் மத்திய ஒன்றிய செயலாளர் அண்ணன் அன்பு அவர்கள், வாணியம்பாடி கிராம காவல் நிலைய ஆய்வாளர் அமுதா அவர்கள், வார்டு செயலாளர், அவர்கள், வணிகர் சங்க மாவட்ட செயலாளர் KBS. மாதேஸ்வரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் மற்றும் பெல்ட்டுகளை வழங்கினர். நிகழ்வில் முன்னாள் வார்டு உறுப்பினர் திரு. சண்முகம், நகர கழக துணை செயலாளர்.K. தென்னரசு ex.MC, கலைக்குழு ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி



மயிலாடுதுறை மாவட்ட காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி, சிறுவர்கள்,காவலர்கள் உள்ளிட்ட 500க்கு மேற்பட்டோர் உற்சாகமாக பங்கேற்பு..

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கால் டாக்ஸ் பகுதிகளிலிருந்து துவங்கிய விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார், கால் டாக்ஸியில் தொடங்கிய போட்டி மேலையூரில் உள்ள தனியார் பள்ளி வரை சுமார் 7 கிமீ தொலைவில் போட்டி நடைபெற்றது. போட்டியில் பள்ளி பிரிவு சிறுவர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் 12 வயது முதல் 18 வயதிற்கு உட்பட்டவர்கள், பொதுப் பிரிவு ஆண்கள் மற்றும் பெண்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த மாரத்தான் போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக 5000,இரண்டாம் பரிசாக 3000, மூன்றாவது பரிசாக 2000 மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் ஊக்குத்தொகையாக 1000 சராசரியாக வழங்கப்பட்டது.மேலும் போட்டியில் கலந்து கொண்டவர்களை ஊக்க தொகை மற்றும் சான்றிதழ் வழங்கி உற்சாகப்படுத்தினார் தொடர்ந்து நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட காவல்துறை சார்பாக செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
12.1.2026

# விசுவாசத்துடன் உள்ள கூட்டணி நாடுகளை அமெரிக்கா மிரட்டுவது அதிர்ச்சி தருகிறது: டென்மார்க் எம்.பி.



கோபன்ஹேகன், ஜன.12

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ ஒரு போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந் நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து சில நாட்களுக்கு முன் நாடு கடத்தப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, அவர்கள் இருவரின் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவர்கள் விரைவில் அமெரிக்க கோர்ட்டுகளில், அமெரிக்க மண்ணில், அமெரிக்க நீதியை பெறுவார்கள் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் பமீலா போண்டி கூறினார்.

வெனிசுலாவில் உள்ள எண்ணெய் மற்றும் பிற வளங்களை குறி வைத்து அமெரிக்கா இந்த நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்ற குற்றச்சாட்டு கூறப்படுகிறது. வெனிசுலாவில் அத்துமீறி அமெரிக்கா நடந்து கொண்டதற்கு சர்வதேச அளவில் கண்டனம் எழுந்துள்ளது.

ரஷியா, சீனா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் அமெரிக்காவுக்கு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன.

இந்திய அரசு இதற்கு கவலை தெரிவித்துள்ளது. ஜப்பான் நாடுகளும், ஐ.நா. அமைப்பும் கூட வெனிசுலாவுக்கு ஆதரவாக பேசியுள்ளன.

கிரீன்லாந்து மற்றும் டென்மார்க் எடுத்து கொள்ளப்படும் என டிரம்ப் பேசி வருவதும் சர்ச்சையாகி உள்ளது. இந்த நிலையில் டென்மார்க்கில் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த எம்.பி. ராஸ்மஸ் ஜர்லோவ் நிருபர்களிடம் கூறும்போது, அமெரிக்கா எங்கள் மீது ராணுவ வீரர்களை கொண்டு மிரட்டுவது என்பது ஏற்று கொள்ள முடியாதது. ஆழ்ந்த வேதனை ஏற்படுத்துகிறது.

உங்களுக்கு தொடர்ந்து விசுவாசத்துடன் இருந்தது தவிர உங்களுக்கு எதிராக வேறெதுவும் செய்யாத நாடுகளை, கூட்டணி நாடுகளை நீங்கள் மிரட்டுவீர்கள் என்பது அதிர்ச்சி தருகிறது. நினைத்து பார்க்க முடியாதது என அமெரிக்காவின் அச்சுறுத்தலை குறிப்பிட்டு கூறினார்.

இது பிற நாடுகளுக்கும் கூட வருத்தம் ஏற்படுத்தும். ஏனெனில், டென்மார்க் மீது இது போன்று படைகள் கொண்டு மிரட்டல் விடப்படும் என்றால், எந்த நாடும் பாதுகாப்பாக இருக்காது என கூறினார்.

இதேபோன்று கிரீன்லாந்து பற்றி குறிப்பிட்ட அவர் அந்நாட்டுக்கு எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லை. ஒரே அச்சுறுத்தல் அமெரிக்கா தான். சீனா மிரட்டி வருகிறது என்பது எல்லாம் பொய்யான புனைவுகள். சீனாவின் தூதரகமோ, சுரங்க பணிகளோ, ராணுவ வீரர்களோ கிரீன்லாந்தில் இல்லை என கூறினார்.

# கேரளாவுக்கு மத்திய மந்திரி அமித்ஷா 11ந்தேதி வருகை

அமெரிக்காவின் மிஸ்ஸிஸிப்பி மாகாணத்தில் ஜாக்சன் பகுதியில் இருந்து 150 மைல்கள் வடமேற்கே வெஸ்ட் பாயிண்ட் என்ற இடத்திற்கு மேற்கே செடார்பிளப் என்ற இடத்தில் வசித்து வரும் 24 வயது வாலிபர் ஒருவர் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறில் தந்தை, மாமா மற்றும் சகோதரரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து விட்டு, சகோதரரின் காரை திருடி கொண்டு, பிளேக் ரோடு பகுதியில் சென்றுள்ளார்.

அப்போது, அந்த பகுதியில் துப்பாக்கி முனையில் 7 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார். எனினும், அந்த சிறுமியை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து விட்டு தப்பினார். அதே பகுதியில் 7 வயதுக்குட்பட்ட மற்றொரு சிறுமியை கொல்லவும் முயற்சித்து உள்ளார். பின்னர் விட்டு விட்டார்.

இதன்பின்னர் சிலோவம்கிரிப்பித் சாலைக்கு சென்ற அந்த நபர் எதிரே வந்த 2 சகோதரர்களை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்திருக்கிறார். அவர்களில் ஒருவர் உள்ளூர் கிறிஸ்தவ ஆலயத்தில் பாதிரியாராக இருந்து வருகிறார்.

இந்த சம்பவம் பற்றி அறிந்ததும் போலீசார் அவரை தேடி வந்தனர். அதிகாலை 3 மணியளவில் அவரை பிடித்தனர். அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

கடந்த 10 ஆண்டில் இல்லாத வகையில் பெரிய அளவில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவம் இதுவாகும் என போலீசார் தெரிவித்தனர். இதற்கு முன்னர் 2017ம் ஆண்டில் மிஸ்ஸிஸிப்பியில், மிக பெரிய அளவில் நடந்த துப்பாக்கி சூட்டில் 8 பேர் பலியானார்கள்.

## இன்றைய ராசி பலன்கள் (12.1.2026)

மேஷம்: வேலையில் புதிய பொறுப்புகள் வரும். பொறுமையுடன் செயல்பட்டால் முன்னேற்றம் கிடைக்கும். செலவுகளில் கவனம் தேவை.

ரிஷபம்: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பணவரவு திருப்தி தரும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

மிதுனம்: பேச்சுத் திறன் மூலம் சாதகமான முடிவுகள் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல நாள். தேவையற்ற விவாதங்களை தவிர்க்கவும்.

கடகம்: மனஅமைதி முக்கியம். வேலைகளில் சற்று தாமதம் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

சிம்மம்: தன்னம்பிக்கை உயரும் நாள். மேலதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

கன்னி: பணவிஷயங்களில் திட்டமிட்டு நடக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன் நல்லபுரிதல் ஏற்படும்.

துலாம்: செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். திருமணம் தொடர்பான விஷயங்களில் நல்ல செய்தி வரும்.

விருச்சிகம்: உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். மறைமுகஎதிரிகளை கவனிக்கவும். மன அழுத்தம் குறையும்.

தனுசு: பயணம்தொடர்பானவாய்ப்புகள் வரும். கல்வி, போட்டித் தேர்வுகளில் முன்னேற்றம் காணப்படும்.

மகரம்: வேலைப்பளு அதிகரிக்கும். பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட்டால் உயர்வு கிடைக்கும்.

கும்பம்: புதிய யோசனைகள் வெற்றி தரும். நண்பர்கள் மூலம் லாபம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

மீனம்: ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். குடும்ப ஆதரவு கிடைக்கும். செலவுகளை கட்டுப்படுத்தவும்.

# டிரோன் மூலம் கண்காணித்ததாக குற்றச்சாட்டு தென்கொரியாவை எச்சரித்த வடகொரியா

பியாங்யாங், ஜன.12

வடகொரியா, தென்கொரியா இடையே நீண்டகாலமாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதில் தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ள நிலையில், எதிர்ப்புகளை மீறி வடகொரியா அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. வடகொரியாவை மிரட்டும் வகையில், அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா அவ்வப்போது கூட்டு ராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், தங்கள் வான் எல்லைக்குள் டிரோன்களை அனுப்பி முக்கிய ராணுவ தளங்களை கண்காணித்ததாக தென்கொரியா மீது வடகொரியா குற்றம்சாட்டியுள்ளது. இது தொடர்பாக வடகொரிய ராணுவம் வெளியிட்டு ள்ள செய்திக்குறிப்பில், தென்கொரியாவின் டிரோன்கள் எல்லை தாண்டி வந்து 3 மணி நேரத்திற்கும் மேலாக பறந்ததாக கூறப்பட்டுள்ளது.

அந்த டிரோன்கள் தங்கள் நாட்டில் உள்ள முக்கியமான இடங்களை புகைப்படம் எடுத்ததாகவும் வடகொரியா கூறியுள்ளது. மேலும் உளவுபார்க்கும் செயல்களில் ஈடுபட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும் இந்த குற்றச்சாட்டை தென்கொரியா திட்டவட்டமாக மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



அதிமுக நேர்காணல் உடுமலை மடத்துக்குளம் தொகுதி எம்எல்ஏக்கள் கலந்து கொண்டனர் அதிமுகவில் வேட்பாளர் நேர் காணல் கடந்த 912026 (வெள்ளிக்கிழமை) தொடங்கியது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த நேர்காணல் நடை பெற்றது. திருப்பூர் புறநகர் மேற்கு, திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டங்களில் உள்ள தொகுதிகளுக்கு வேட்பாளர் நேர்காணல் நடைபெற்றது. இதில் சிட்டிங் எம்எல்ஏக்கள் கே.ராதாகிருஷ்ணன் (உடுமலைப்பேட்டை), சி.மகேந்திரன்(மடத்துக்குளம்) நேர்காணலில் பங்கேற்றனர்.

# ஈரானில் அரசுக்கு எதிராக தொடரும் போராட்டம்: 51 பேர் பலி

ஈரானில் கடும் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு உள்பட பல்வேறு காரணங்களால் அந்நாட்டு உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனிக்கு எதிராக கடந்த மாதம் 28ம் தேதி முதல் மக்கள் போராட்டம் நடைபெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பொதுமக்கள் கமேனி அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி வருகின்றனர். மேலும், அரசுகட்டிடங்களுக்குதீவைக்கும்சம்பவங்களும்அரங்கேறி வருகின்றன.

அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை ஒடுக்கும் நடவடிக்கையில் கமேனி தலைமையிலான ஈரான் அரசு தீவிரம் காட்டி வருகிறது. போராட்டக்காரர்களை சுட்டுக்கொல்லும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. இந்நிலையில், ஈரானில் நடைபெற்றுவரும் போராட்டத்தில் இதுவரை 51 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில், பாதுகாப்புப்படையினர் 21 பேர், 9 குழந்தைகளும் அடக்கம் என தகவல் வெளியாகியுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பாதுகாப்புப்படையினர் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். மேலும், போராட்டத்தில் ஈடுபட்டதாக இதுவரை 2 ஆயிரத்து 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 2025ல் நான் படித்த புத்தங்களின் எண்ணிக்கை... நடிகை மியா ஜார்ஜ்



தமிழ் மற்றும் மலையாளத்தில் மிகவும் பிரபலமான நடிகையாக இருந்தவர் மியா ஜார்ஜ். இவர் தமிழில் வெளிவந்த இன்று நேற்று நாளை படத்தின் மூலம் பிரபலமானார். இவர் கடந்த 2020ஆம் ஆண்டு அஸ்வின் பிலிப் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு ஒரு மகன் இருக்கிறார். கடைசியாக இவரது நடிப்பில் தலவன் படம் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது

இந்நிலையில், தனது இன்ஸ்டா பக்கத்தில் புத்தகங்கள் குறித்து அவர் கூறியதாவது:

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்புதான் படிப்பதில் தீவிர ஆர்வம் காட்டினேன். என்னுடைய நோக்கம் என்னவென்றால், ஸ்கிரீன் டைமிங்கை குறைக்கவும், வெட்டியாக நாள்களைப் போக்காமல் பயனுள்ளதாக மாற்ற அர்த்தமுள்ள நூல்களைப் படிக்க முடிவெடுத்தேன்.

தொடக்கத்தில் பீல் குட் புத்தகங்களைப் படித்தேன். பிறகு, எனக்கு பிடிக்கும் என்றே நினைக்காத சுய முன்னேற்றம் குறித்த புத்தங்களைப் படித்தேன். ஒவ்வொரு ஆண்டும் நான் புதிய புதிய புத்தகங்களை தேடித்தேடி வாங்கி படித்தேன். புத்தகங்களை அடுக்குவது பிடிக்கும். பயணத்துக்குச் சென்றாலும் என்னுடன் ஒரு புத்தகம் இருக்கும். புத்தகம் படிப்பது தற்போது தீவிரமான பழக்கமாகிவிட்டது. 2025ல் மட்டும் 36 புத்தகங்கள் படித்தேன். ஒரு மாதத்திற்கு 3 புத்தகங்கள். தாமதமாக படிக்கும் பழக்கம் வந்த ஒருவருக்கு இது நல்ல முன்னேற்றம்தான் என அதில் பதிவிட்டுள்ளார்.

# இந்தியாவிற்கு வந்தடைந்த கால்பந்து உலகக் கோப்பை




நடப்புசாம்பியன் அர்ஜென்டினா, பிரேசில், பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி உள்பட 48 அணிகள் பங்கேற்கும் 23வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி ஜூன், ஜூலை மாதங்களில் அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய 3 நாடுகளில் நடக்கிறது.

இந்நிலையில், உலக சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக பிபா உலகக்கோப்பை இந்தியாவிற்கு வந்துள்ளது. இந்தியாவில் பிபா கால்பந்து கோப்பையை அறிமுகம் செய்யும் செய்யும் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது.

உலகக் கோப்பை வென்ற முன்னாள் பிரேசில் வீரரும் ஃபிஃபா ஜாம்பவானுமான கில்பர்டோ டி'சில்வா மற்றும் மத்திய அமைச்சர் மன்சுக் மண்டவியா ஆகியோர் முன்னிலையில் நடந்த விழாவில் கோப்பை அறிமுகம் செய்யப்பட்டது.

# 20 கோடி பார்வைகளை கடந்த யாஷின் "டாக்ஸிக்" டீசர்

நடிகர் யாஷ், பிரசாந்த் நீல் இயக்கத்தில் வெளியான கே.ஜி.எப் 1, கே.ஜி.எப் 2 உள்ளிட்ட படங்களின் மூலம் இந்திய அளவில் பிரபலமானவர். இந்த படம் வெளியாகி அனைத்து ரசிகர்களையும் கவர்ந்து வசூலையும் வாரி குவித்தது. . இந்த படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியாகி வசூலை வாரி குவித்தது. இதையடுத்து நடிகர் யாஷ்க்கு கர்நாடகா மட்டுமின்றி இந்தியா முழுவதும் ரசிகர் பட்டாளம் உருவானது.

இவர் தற்போது இயக்குனர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில் கேவிஎன் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி வரும் 'டாக்ஸிக்' படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில், நயன்தாரா, ருக்மணி வசந்த், கியாரா அத்வானி, ஹுமா குரேஷி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். கேங்ஸ்டர் டிராமாவாக உருவாகி வரும் இந்த படம் மார்ச் 19ந் தேதி வெளியாக உள்ளது.

நடிகர் யாஷின் 40வது பிறந்த நாளை முன்னிட்டு படத்தின் அறிமுக டீசர் வெளியானது. இதில், யஷ் ஒரு பெண்ணுடன் காருக்குள் நெருக்கமான உறவில் இருப்பதும் பின், வெளியே வந்து எதிரிகளைக் கொடூரமாகத் தாக்குவதுமாக காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அந்த வீடியோவில் யாஷின் பெயர் 'ராயா' என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'டாக்ஸிக்' டீசர் இதுவரை 20 கோடி பார்வைகளைக் கடந்துள்ளது. யூடியூபில் 8 கோடி பார்வைகளையும், பிற சமூக வலைதளங்களில் 12 கோடி பார்வைகளையும் கடந்துள்ளது. டீசர் உருவாக்கிய எதிர்பார்ப்பு படத்தின் மீது இருப்பதால் 'டாக்ஸிக்' ரிலீசுக்கு காத்திருக்கின்றனர்.

# தேசிய சீனியர் கூடைப்பந்து: தமிழக அணி இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



தமிழ்நாடு கூடைப்பந்து சங்கம் சார்பில் 75வது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்து வருகிறது. இதில் 7வது நாளான நேற்று நடந்த ஆண்கள் பிரிவு அரையிறுதியில் இந்தியன் ரெயில்வே அணி 6553 என்ற புள்ளி கணக்கில் டெல்லியை சாய்த்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இன்னொரு அரையிறுதியில் நடப்பு சாம்பியன் தமிழ்நாடு 10253 என்ற புள்ளி கணக்கில் உத்தரபிரதேசத்தை எளிதில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது..

# "பராசக்தி" படத்தின் முதல் நாள் வசூல் விவரம்




'பராசக்தி' திரைப்படம் முதல் நாளில் ரூ. 27 கோடி வசூல் செய்துள்ளதாக படத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' திரைப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நேற்று திரையரங்குகளில் வெளியானது. ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா, சேத்தன் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தை டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்துள்ளார்.

இந்தி மொழித் திணிப்பின்போது தமிழகத்தில் நடைபெற்ற மாணவர்களின் எழுச்சியைப் பேசும் படமாக 'பராசக்தி' திரைக்கு வந்துள்ளது. சென்சாரில் இந்தப் படத்தில் 25க்கும் மேற்பட்ட இடங்களில் மாற்றம் செய்யப்பட்டது.

ஸ்ரீலீலா, ஷாலினி அஜித்குமார், துருவ் விக்ரம், ரவி மோகன், பாடகி கெனிஷா ஆகியோர் நேற்று தியேட்டருக்கு சென்று படம் பார்த்துள்ளனர்.

இந்நிலையில், 'பராசக்தி' திரைப்படம் உலக அளவில் முதல் நாளில் ரூ. 27 கோடி வசூல் செய்துள்ளதாக படத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

# பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ்: சபலென்கா இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபனுக்கு முன்னோட்டமாக கருதப்படும் பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஆஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியனும், நம்பர் ஒன் வீராங்கனையுமான அரினா சபலென்கா (பெலாரஸ்) கரோலினா முச்சோவாவை (செக்குடியரசு) எதிர்கொண்டார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய சபலென்கா 63, 64 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்றார். இதனால் சபலென்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kilpauk Garden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066